ஸ்ரீ

# கிருஷ்ணன் தூது

பண்டிட்

நா. கிருஷ்ணசாமி நாயுடு

எழுதியது.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

மதுரை & சென்னை.

[ரிஜிஸ்தர் செய்தது] 1932 [விலை அணு 4.

12372

ஸ்ரீ

# கிருஷ்ணன் தூது

THE MADURA TAMIL SANGAM

பண்டிட்

நா. கிருஷ்ணசாமி நாயுடு

எழுதியது.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

மதுரை & சென்னை.

ரிஜிஸ்தர் செய்தது.] 1932. [விலை அணா 4.

Printed at the
Excelsior Press, Madura
1932.



துரியோதனன் தர்பார்.

# முகவுரை.

ஸ்ரீ ராம காவியத்தில் சுந்தர காண்டம் மங்கள கரமாய்த் துலங்குதல் போலவே ஸ்ரீ பாரத காவியத்தில் உத்தியோக பருவம் மங்கள கரமாய்த் துலங்குகிறது.

இதன் முக்கியாம்ஸமான கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தைப் பாரதாம்ஸம் முழுதுமே மாணவர் ஆவலோடு படித்தறியும் வண்ணம் அழகிய செந்தமிழ் நடையில் எழுதியதாய் இச் சிறு நூல் அமைந்திருக்கிறது.

ஆதலின் ஆசிரியர்கள் இதனை அன்போடு பயன் படுத்தி ஆதரிப்பார்கள் என்று நினைக்கின்றேன்.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
மதுரை.

# பொருளடக்கம்.


1. சந்திரகுல சங்கிரகம் .... .... .... 1

2. துரியோதனன் துணிபு .... .... .... 23

3. துளபமால் தூது .... .... .... 39

ஓம்.

# ஸ்ரீ கிருஷ்ணன் தூது.

## அத்தியாயம் 1.

### சந்திரகுல சங்கிரகம்.

உலகம் ஒரு உருண்டை வடிவமாயிருக்கிறதென்று நாம் படித்திருக்கிறோம். இதனாலேதான் இதற்குக் கோளம் என்கிற ஒரு பெயரும் அமைந்திருக்கிறது. உலகம் பூமி என்பன ஒரு பொருட் சொற்க ளானபடியால் பூமியைப் பற்றிக் கூறும் சாஸ்திரம் "பூகோள சாஸ்திரம்" என்று பெயர் பெறுதற்கும் காரணமாயிற்று. உலகமாகிய இக் கோளத்திற்குள் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிகா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, என்கிற ஐந்து கண்டங்கள் அமைந்திருக்கின்றன. முன்னவை நான்கும் குணகோளார்த்தத்திலும், பின்னது ஒன்றும் குடகோளார்த்தத்திலும் பரவி இருப்பதை நீங்கள் படத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். இவ் ஐந்து கண்டங்களிலும் மிகப் பெரியது

ஆசியா கண்டமே. இக் கண்டத்தின் தென் பாகத்தில்தான் நமது புண்ணியபூமி யாகிய "இந்தியா" இருக்கிறது. இதற்கு வடக்கே இமய கிரி பருவதமும் மற்ற மூன்று பக்கங்களிலும் சமுத்திரங்களும் எல்லைகளாயமைந்திருக்கின்றன. "உலகத்தில் இது ஒரு செல்வம் நிறைந்த பெரிய தேசம்" என்பது நமது ஞாபகத்தில் இருக்கவேண்டும். பொதுவாக ஒரு கண்டத்தையோ, தேசத்தையோ, மாகாணத்தையோ, ஜில்லாவையோ, தாலூகாவையோ, கிராமத்தையோ பற்றி நாம் எழுதும்போது 'அது நிலமடந்தைக்கு ஒரு முகம்போன்றது' என்ருவது, 'புவிமடந்தைக்கு ஒரு திலகம் போன்றது' என்ருவது, 'பூமடந்தைக்கு ஒரு கண் போன்றது' என்ருவது வருணிப்பது வழக்கம். அதனை "உவமை" என்று ஆன்ருேர் கூறுவர். ஆனல் இவ்வுலகமாகிய நிலமடந்தைக்கு, இந்த நமது இந்தியா "ஒரு முகமோ, திலகமோ, கண்ணே, அல்லது அவற்றினும் மேம்பட்ட ஒன்ருே" என்று இங்கு நாம் கூறுவது உண்மையே யன்றி "ஒரு வருணனையின் பொருட்டு வந்த உவமை யல்ல" என்பதும் நமது ஞாபகத்தில் இருக்க வேண்டும். இத்தகைய பெருமை பொருந்திய நமது இந்தியாவை ஆதி காலத்தில் சூரியகுலத்தரசர், சந்திரகுலத்தரசர் என இரண்டுபிரிவினர் முறையே அரசு புரிந்து வந்திருக்கிருர்கள்.

அவர்களில் சூரியகுலத்தாருக்கு அயோத்தியா என்பது தலைநகரம். அங்ஙனமே சந்திர குலத் தாருக்கு அஸ்தினா என்பது தலைநகரா யிருந்து வந்தது. இந்த அஸ்தினாபுரியைப் பூருவ காலத் தில் சந்திர குலத்தினரான புதன், புரூரவா, ஆயு, நகுஷன், யயாதி, புரு என்கிற அரசர் களுக்குப் பின் துஷ்யந்தன் என்னும் ஓர் அரசன் அரசு செலுத்தி வந்தான். அவன் அழகும் புகழும் ஒருங்கே அமையப் பெற்றவன். அம்மன்னன் சகுந்தலை என்கிற ஒரு பெண் மணியை மணந்து பரதன் என்கிற ஒரு புத்திர னைப்பெற்றான். அக்குமரன்சிறுபருவத்திலேயே மிக்க அறிவும் வெற்றியும் பெற்று விளங்கினா னாதலின் மைந்தன் திறமையைத் தந்தை கண்டு மகிழ்வடைந்தான். தகுந்த வயது வந்ததும் மகனுக்கு மகுடம் புனைந்து பின்னர் மனைவியு டன் துஷ்யந்தன் நாடு துறந்து, காடு புகுந்து, நற்றவம் புரிந்து நற்கதியடைந்தான்.

பின்பு பரதன் ஏகச்சக்கரவர்த்தியாயிருந்து, நெடுங்காலம் அரசாண்டு வந்தபடியால் அவன் பொருட்டு நமது இந்தியா 'பரதநாடு' என்றும் ஒரு பெயர் பெற்று வழங்குகிறது. பரதனுக்குப் பின் அஸ்தி, குரு என்ற அரசர்கள் தோன்றி னார்கள். குரு என்பவன் காலத்தில் அவன் நாடு குருநாடு என்றும், அவன் குலம் குருகுலமென்

றும் பெயரோங்கி வந்தன. அவர்கள் சந்ததி யில் சந்தனு என்கிற ஒரு வேந்தன் உதித்தான். அவன் மகா பலவான், மனுமுறை கடவாத மன்னவன். அவன் மன்னுயிரையுந் தன்னுயி ரென மதித்து வந்தபடியால் மாதமும்மாரி பொழிந்து ஜனங்கள் பயமும், பசிப்பிணியு மின்றி இன்புற்று வாழ்ந்து வருவாராயினர். இவனுக்குக் 'கங்கை' 'பரிமளகந்தி' என்கிற இரண்டு மனைவிகள் இருந்தார்கள். மூத்தவளா கிய கங்கை என்பவளிடம் 'பீஷ்மன்' என்னும் ஒரு புத்திரன் பிறந்தான். இளையவளாகிய பரிமளகந்தி என்பவளிடம் 'சித்திராங்கதன்' 'விசித்திரவீரியன்' என்கிற இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். தந்தையின் க்ஷேமத்தைக் கருதி, பீஷ்மன் மண்ணாசை பெண்ணாசை இரண்டை யும் வெறுத்து, முடி மணந் தரியாமலும், கடி மணம் புரியாமலும் பிரமசாரி விரதமே பூண்டு விட்டான். சந்தனுவுக்குப் பிறகு அவனது மைந்தன் சித்திராங்கதனென்பான் சித்திராங் கதனென்னும் ஒரு கந்தருவனால் வெஞ்சமரில் வதையுண்டு, விண்ணுலகடைந்தானாகவே அவ னுடைய தம்பியாகிய விசித்திரவீரியனே பட் டத்திற்கு உரியவனானான். இவனது மூத்த தம யனாகிய பீஷ்மனே இவனுக்கு மாநிலங்காவல னாக மகுடஞ் சூட்டிவைத்து, காசிராஜன் குமாரத்திகளான அம்பிகை அம்பாலிகை என்

னும் இரண்டு மடந்தைகளையும் மணஞ்செய்வித்தான். இவன் சில வருஷம் செங்கோலோச்சி, மக்கட் பேறின்றி, மண்ணுலகை நீத்து, மிக்க வியாதியால் விண்ணுலகடைந்தனன். ஆகவே சந்திர வம்ஸம் சந்ததியற்றுப் போனதைப் பரிமளகந்தி, உணர்ந்து மனது வருந்தி, பீஷ்ம னிடத்து முறையிட்டு, அவனை விவாகஞ் செய்து கொள்ளுமாறும், அரசுரிமையைத் தாங்கி நடத்துமாறும் வேண்டிக்கொண்டனள்.

பீஷ்மன் "நான் செப்பிய வாய்மையில் இருந்து ஒரு சிறிதும்தப்பேன்" என்று மறுத்து விடவே அவள் வியாஸ மகரிஷியை விரும்பிச் சிந்தித்தாள். அம் மகரிஷியின் திருவருளால் அம்பிகையினிடம் திருதராஷ்டிரனும், அம்பா லிகையிடம் பாண்டுவும், அவ்விரு பெண்மணி களது பணிப் பெண் ஒருத்தியிடம் உத்தம வீர னும் விதுரனும் பிறந்தார்கள். திருதராஷ்டி ரன் பிறவியிலேயே குருடனானது பற்றிப் பீஷ் மன் அவனைப் பேருக்கு அரசனாக வைத்துப் பாண்டுவை இராஜ்யாதிகாரம் புரியுமாறு நிறு வித்தான். விதுரன் பாண்டு மன்னனுக்கு அர சியலில் உதவி புரிந்து, பின்னர் அமைச்சனுமா னன். பாண்டுவோ பராக்கிரமசாலி. ஆதலால் அவன் பல அரசர்களைச் சண்டையில் ஜெயித்து, அவனுக்குக் கப்பங் கட்டி வருமாறு செய்வித்

தான். இவ்வரச குடும்பத்திற்கே பெரியோனாகிய பீஷ்மன் சமயம் நேர்ந்தபோதெல்லாம் இவர்களுக்கு உதவிபுரிந்து அறவழியில்தவருவண்ணம் அடிக்கடி புத்தி புகட்டிச் சந்திரகுலத்தின் பெருமை தரணி முழுதும் பரவிப் புகழுடையுமாறு செய்துகொண்டுவந்தான். பின்னர் திருதராஷ்டிரன் காந்தாரி என்பவளை மணந்து, துரியோதனன் துச்சாதனன் முதலிய நூறு புத்திரர்களையும், துச்சலை என்னும் ஒரு புத்திரியையும் பெற்றான். பாண்டு மன்னன் குந்தி என்கிற கோதையையும் மாத்திரி என்கிற மங்கையையும் மணம் புரிந்தான். குந்தி கன்னிப்பருவமுள்ளவளாய் இருந்தபோது அவள் பிறந்தகத்தில் தூர்வாச முனிவருக்குப் பணிவிடை செய்து வந்ததின் நிமித்தம் அவர் இவளுக்கு ஐந்து மந்திரங்களை உபதேசித்து "நீ தேவர்களில் யாரை நினைத்து உச்சரிக்கிறாயோ அவர் உன் நேரில் தோன்றி உனக்கருள் புரிவர்'' என்று கூறி இருந்தார். 'பெண் புத்தி பின்புத்தி' என்பதற்கிணங்க அவள் அப்பொழுதே அவசரப்பட்டு ஒரு மந்திரத்தை உச்சரித்துச் சூரியனை நினைத்தாள். உடனே சூரியன் ஒரு சுந்தர புருஷனாகத் தோன்றி,ஒருபுத்திரனை நல்கினன். அதுபோது அவள் கன்னிப் பருவமாதலின் உலக நிந்தைக்குப் பயந்து, அக் குழந்தையை ஒரு மிதவைப் பெட்டியில் வைத்து, யாருமறியா

வண்ணம் அதனைக் கங்கைக் கரையில் விட்டு விட்டாள். திருதராஷ்டிரனது தேர்ப்பாகன் கங்கையில் நீராடுகையில் அதனைக் கண்டெடுத்து, அப்பெட்டியைத் திறந்துபார்த்து, அம் மகவை விரும்பி வீட்டுக்குக் கொண்டுசென்று 'கர்ணன்' என்று பெயர் கொடுத்து வளர்த்து வந்தனன். அவனும் அங்கு பரசுராமனிடத்தில் படைக்கலப்பயிற்சிபெற்று, சமர்த்தனாய்விளங்கி வந்தனன். பின்னர் குந்தி இந்த மைந்தன் சங்கதியை மறந்தே விட்டனள். அதன்பிறகு இவள் பாண்டு மன்னனை மணந்ததின் பின், புகுந்தகத்தில் யமனை நினைத்து, இரண்டாம் மந்திரத்தை உச்சரித்து அவனதருளால் தருமனையும், வாயுவை நினைத்து, மூன்றாம் மந்திரத்தை உச்சரித்து அவனதருளால் வீமனையும், இந்திரனை நினைத்து, நான்காம் மந்திரத்தை உச்சரித்து அவனதருளால் அருச்சுனனையும் ஈன்றெடுத்தாள். மீதமிருந்த ஐந்தாவது மந்திரத்தைத் தனது கணவனது கட்டளையின்படி மாத்திரிக்கு உபதேசித்தாள். அம்மாது அந்த மந்திரத்தை ஜெபித்து, அசுவனீ தேவர்களைத் தியானிக்க அவர்தம் அருளால் நகுலன் சகாதேவன் என்னும் இரண்டு புத்திரர்களைப் பெற்றாள். ஆக இந்த ஐந்து புத்திரர்களும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளைப்போலவே ஓங்கி வளர்ந்தார்கள். குருகுலத்தோன்றல்களான துரியோத

ஞதியர்கள் நூற்றுவர்களுக்குக் கௌரவர்கள் என்றும், பாண்டுவின் தோன்றல்களான ஐவருக்குப் பாண்டவர்கள் என்றும் பெயர் உண்டாயிற்று. இக்குழந்தைகள் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் போது பாண்டுமன்னன் தன்குழந்தைகள் கொஞ்சிக் குலவி குவிந்து விளையாடும் அழகினையும், அவர்கள் பேசுகின்ற அமுதமொத்த மழலைச் சொற்களையும் கண்டும் கேட்டும் பேர் உவகை பூண்டு களிப்புற்றுவந்தனன்.

ஒரு நாள் வேட்டையின் மீது காடுசென்ற பாண்டு, அங்கு மான் வடிவத்துடன் தவத்திலமர்ந்திருந்த ஒரு முனிவரை மானென்றே நினைத்து, அவர் மீது ஒரு பாணந்தொடுத்தனன். அது பட்டதும் அவர் சினந்து இவன் மீது ஒரு சாபமிட அச்சாபத்தின் காரணமாகப் பாண்டு பரகதி யடைந்தனன். இவன் இறந்ததும் இவனது இளைய மனைவி இவனது பிரிவிற்காற்றுமல் உடன் மடிந்தனள். பால்குடிமறவாப் பாலரான பாண்டவர்களை முன்னிட்டுப் பதிபக்தியிற் சிறந்த உத்தமக் குந்தி உயிர்தரித்திருந்தாள். தம்பி இறந்ததைக்கேட்ட அண்ணன் திருதராஷ்டிரன், தன் நினைவற்றுத்தவித்தான். தயங்கினன், மிக மயங்கினன். மயங்கித்தான் என்ன! மாண்டார் வருவதுண்டோ? நினைந்த

உடை காய்வதுபோல் நாளேற நாளேற அவன் கவலை ஒருவாறு நீங்கி, அவன் தம்பியின்மீது வைத்திருந்த அன்பைத் தம்பிதன் மக்களாகிய பாண்டவர்கள் மீது வைத்து, அவர்களை ஆசையோடு வளர்த்து வந்தான். இந்தச் சமயந்தான் பலராமனும் கிருஷ்ணனும் ஆயர்பாடியில் வசுதேவருக்குப் புத்திரராகப் பிறந்து, சிறு பிராயத்திலேயே பல திருவிளையாடல்களைப் புரிந்து, மிகக் கொடிய பாவியான கம்ஸனையும் வதைத்து, மேற்குக் கடலிடையே ஒரு தீவில் 'துவாரகை' என்னும் ஓர் அழகிய நகரமுண்டு படுத்தி அங்கு சென்று வசித்து வந்தார்கள். வசுதேவருக்குக் குந்திதேவி தமக்கை முறையாதல் பற்றிக் கிருஷ்ணனுக்கு அவள் அத்தையாவாள். இக்காரணம் பற்றி அத்தை மக்களாகிய பாண்டவர்கள்மீது கிருஷ்ணனுக்கும், மாமன் மகனை கிருஷ்ணன் மீது பாண்டவர்களுக்கும் பரஸ்பர நேசம் பெருகலாயிற்று. பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பாட்டனாராக விளங்கும் பீஷ்மர் அவர்களைக் கிருபர் துரோணர் என்னும் ஆசிரியர்பால் சேர்த்துக் கல்வித் துறையிலும், அரசர்க்குரிய வில்வித்தைமுதலிய போர்த்துறையிலும் சமர்த்தராம்படி செய்தார். என்றாலும் பாண்டவர்களைப்போல கௌரவர்கள் பலத்திலும், படைக்கலப் பயிற்சியிலும் சிறந்து முன்னேறவில்லை. ஆனால் துரியோ

தனுதியர்களுக்குப் பாண்டவர்கள் மீது ஏற்பட்டு வந்த பொறாமைக் குணம் ஒன்றே நாளேற நாளேற முன்னேறி வந்தது.

ஒருநாள் துரோணர், கௌரவ பாண்டவர்களின் கல்வித்திறமையை அவர் குடும்பத்தார்க்குக் காண்பிக்க நினைத்து பீஷ்மன், விதுரன் திருதராட்டிரன் முன்னிலையில் ஒரு சபை கூட்டினர். பிள்ளைகள் போர்க்கோலம் பூண்டு ஒருவரை ஒருவர் எதிரியாக நினைத்துத் தங்கள் தங்கள் திறமையைக் காண்பித்தார்கள். அதில் துரியோதனனும், வீமனும் மல்யுத்தம் புரிந்தார்கள். வீமன் துரியோதனனை வாரி எறிந்தான். அனைவரும் வீமனை மெச்சிக் கொண்டாடினார்கள். இது துரியோதனனுக்குப் பெரிய அவமானமாக இருந்தது. அன்றிருந்து 'எப்படியாவது வீமனைக்கொன்றே போடவேண்டு'மென்று மனதில் வைரம் வைத்தான் துரியோதனன். பிறகு துரியோதனனுடைய சிநேகிதனுகிய கர்ணன், அருச்சுனனைப் போருக்கழைத்தான். அருச்சுனன் அவனுடன்போர்புரிந்து, அவனை வென்றதோடுகூட, "கர்ணனே! நீ ஒரு தேர்ப் பாகன் மகனுயிருந்தும் இப்பொழுது துரியோதனனுக்கு நீ தோழனுனதுபற்றி அரச குமாரனுன என்னை நீ வாய்கூசாமல் வீரம்பேசிப் போருக்கழைத்தாய். நீயே அழைத்தபடியால்

நான் உன்னுடன் போர் புரிந்து ஜெயித்தேன். என்றாலும் இதில் எனக்கு இழிவே யன்றிப் பெருமை இல்லை'' என்று இகழ்ந்து கூறினான். கர்ணனுக்கு அர்ச்சுனனிடத்தில் அபஜெய மடைந்த கவலை ஒன்று, அவன் தன்னைத் 'தேர்ப் பாகன் மகன்' என்று இழிந்து கூறிய கவலை ஒன்று. ஆக இவ்விரண்டும் அக்கினியில் நெய் வார்த்ததுபோல் உளம்புக்கி எழுந்தது. எழவே, ''ஏ அர்ச்சுனா! நீ என்னை இப்பேரவையில் இவ்வாறு அவமானப் படுத்திப் பேசியதால் நானே உனக்கு எமனாகமுளைத்துஎப்படியும்உன் முடியைத் துணிக்கின்றேன்; இன்றேல் நான் கர்ணன் அல்லன்'' என்று ஆணையிட்டான்.

இதனை அறிந்த பெரியோர் விளையாட்டை அம்மட்டோடு நிறுத்திக்கொண்டு, அவர்களை ஒருவாறு சமாதானப்படுத்தி அனுப்பினர். இது காரணமாகவே துரியோதனன் கர்ணனோடு அதி நட்புக்கொண்டு, அவனை அங்க நாட்டுக்கு அதிபதியும் ஆக்கினான். 'திருதராஷ்டிரன் தன் சகோதரனது புத்திரர்களான பாண்டவர்கள்மீது அன்பு பாராட்டினான்' என்று முன்பு படித்தீர்கள் அல்லவா? ஆனால் இந் நிகழ்ச்சிக்குப் பின்னர் தன் மக்களுக்கு நேர்ந்த அவமானத்தை முன்னிட்டு, அவனுக்கிவர்கள் மீது அந்தரங்கத்தில் வெறுப்பே தோன்றிற்று.

இருப்பினும் அதைத் திடீரென வெளிக்காட்ட முடியாமல் மனதிலேயே ஒருபக்கம் மறைத்து வைத்துக் கொண்டான். இவன் இவ்வாறு மறைத்து வைத்துக்கொண்டதை இவனது மக்களும் காணுதவாறு இசைந்து நடிக்கத் தலைப் பட்டான். ஆகையினுலே சிறிதுநாட் சென்ற பின்னர் தன் மக்களிலும், தன் தம்பி மக்களிலும் ஆக மூத்தோனுகிய தருமனுக்கே இளவரசுப் பட்டங் கட்டவேண்டுமென்று யாவரும்மெச்சக் கூறினுன். கூறியவாறே முடிக்கவும் செய்தான்.

தருமன் அஸ்தினுபுரிக்கு இளவரசனுனது கண்ட துரியோதனன் தன் தந்தையைப்பற்றி மனதுக்குள் நிந்தித்தான். தனது மாமனுகிய சகுனி, சிநேகனுகிய கர்ணன் முதலியவர்களோடு ஆலோசனை செய்து, ஐவரையும் அடியோடு கொல்லுதற்கே தக்க ஒரு சூழ்ச்சி செய்தான். அதன்படி வாரணுவதமென்கிற நகரத்தில் மிக இரகசியமாக ஒரு அரக்குமாளிகை புதிப்பித்து, அங்குபோய் அவர்கள்வசித்துக்கொண்டு அரசாளும்படி கட்டளையிடுமாறு தன் தந்தையிடத்துக் கேட்டுக்கொண்டான். அவன் தந்தை திருதராஷ்டிரனும் அங்கனமே ஐவருக்கும் அறிக்கையிட அவர்களும் 'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை' என்றபடி வாரணுவதம் சென்று குந்தியாகிய அருந்துதி ஒப்பதோர் அன்னையு

டன் அரக்கு மாளிகையிலேயே வசிக்கலானார்கள். இந்த இரகசியத்தை எப்படியோ அறிந்துகொண்ட விதுரன் அதே சிற்பிகளில் ஒருவனைக் கொண்டு சுரங்கம் ஒன்று செய்து வைக்கும்படி ஏற்பாடுசெய்து அதனை வீமனுக்கு மாத்திரம் அறிவிக்குமாறு திட்டப்படுத்தி இருந்தான்.

பாண்டவர்கள்உறங்கும்போதுஇரவில்படர் நெருப்பிட ஒருபுரோகிதனையும் துரியோதனன் உளப்படுத்திவைத்தானதலால் அவன் பாண்டவர்களோடு அதிநட்புக்கொண்டு சமயம்பார்த்திருந்தனன். இதற்கிடையில் ஒருநாள் வீமன் அப்புரோகிதனைத் தம்மோடு அம்மாளிகையிலேயே படுக்குமாறு ஏற்பாடுசெய்து, வாயில்களை எல்லாம் தாளிட்டுவிட்டுத் தன் சகோதரரையும், அன்னையையும் உறக்கத்திலிருந்து விழிக்கச் செய்து, தானே அம்மாளிகைக்கு நெருப்பு மூட்டிச் சுரங்கத்தின் வழியே அவர்களைக் கூட்டிக் கொண்டு வெளியேறிவிட்டான். புரோகிதன் திண்டாடித் திக்குமுக்காடி அம்மாளிகையோடு வெளிக்கிளம்பவேறுபாதையின்றிவெந்துசாம்பலானான். ‘பாண்டவர்கள் நெருப்புக்கே இரையாயினர்’ என்பதோர் வதந்தி எங்கும் பரவிற்று. இதனை அறிந்த நூற்றுவராகிய கூற்றுவர்கள் உள்ளே அகமகிழ்ந்து, வெளியே அழுதழுன்று வாடுவாராயினர். என்னே உலகம்! “வஞ்சித்

"தொழுகு மதியிலிகாள் யாவரையும் வஞ்சித் தோம் என்று மகிழன்மின்-வஞ்சித்த-எங்கும் உளனொருவன் காணுங்கொல் என்றஞ்சி அங் கங்குலைவதறிவு" என்ற ஆன்றோர் மொழியை ஒருசிறிதும் இவர்கள் அறியாராகி இவ்வாறு வெளிவேஷம் போடுவாராயினர்.

நிற்க, தாயுடனும் சகோதரருடனும் சுரங் கத்தின் வழியாகச்சென்ற வீமன் நடந்திருக்கிற அந்தரங்க விஷயங்களை எல்லாம் ஆதியோ டந்தமாக அவரிடம் கூறிக்கொண்டு இடும்பாவ னம் போய்ச் சேர்ந்தான். ஆங்கு இடும்பனைக் கொன்ற வீமன் அன்னையின் கட்டளைப்படி இடும்பியை மணந்து, சிலகாலம் தங்கியிருந்து, கடோற்கசன் என்கிற புத்திரனைப் பெற்றான். தன் மனைவியையும் மைந்தனையும் அவ்வனத்தி லேயேவசிக்குமாறுவீமன்கட்டளையிட்டுஐவரும் பார்ப்பனர் வேடம் பூண்டு வேத்திரகீய நகரம் நண்ணினர். ஆங்கு அவ்வூரையும் வருத்திவந்த பகாசுரன் என்னும் அசுரனை வீமன் கொன்று, அந் நகரத்தார் துன்பந்தீர்த்து, அன்னையும் மக் களும் சில நாள் அவ் வூரிலேயே வசித்திருந்து, தமது வாழ்வு நடத்தி வந்தார்கள்.

பாஞ்சால தேசத்தரசன் புத்திரியாகிய துரௌபதிக்குச் சுயவரம் நியமித்திருப்பதாகக் கேள்விப்பட்ட பாண்டவர்கள் அப் பார்ப்பனக்

கோலத்துடனேயே ஆங்குசென்று, துரியோ தனன் சகுனி கர்ணன் சராசந்தன் சல்லியன் முதலிய தமது பகையாளிகள் அங்கு வந்து முன்னரே அமர்ந்திருப்பதைக்கண்டு, பார்ப்பன மக்கள் இருக்கும் பக்கமணுகி, ஆங்கோர் புறத்தே அமர்ந்து அமைதியாயிருந்தனர்.

சுயம்வரத்துக்கென அமைத்திருந்த யந் திரப் பொறியின் இலட்சியத்தை ஆங்கு குழுமி இருந்த வேந்தரெல்லாம் ஒவ்வொருவராகத் தங்கள் வில் திறத்தைக் காட்டி வீழ்த்த முயற் சித்தனர். அவர்கள் முயற்சிகள் அனைத்தும் முடிவில் முயற்கொம்பாய் முடிந்தன. பின்னர் அந்தணர் கூட்டத்துள் இருந்தெழுந்த அருச்சு னன் வில் வளைத்து, நாணேற்றி, அவ் இலட்சி யத்தை அறுத்துக் கீழே வீழ்த்தித் துரௌபதி யைக்கைப்பற்றினன். பிறகு தாயின் கட்டளைப் படி பாண்டவர் பாஞ்சாலியை மணந்தனர்.

இதனை அறிந்த திருதராஷ்டிரன் விதுர ரின் சொற்படி தூதுவர் மூலம் பாண்டவர்களை வரவழைத்து, அவர்களுக்குப் பாதி ராஜ்ஜியம் வழங்கி, காண்டவப் பிரஸ்தமென்கிற ஒரு பழய நகரத்திலிருந்து வருமாறு ஏற்பாடு செய்தான். அவர்கள் ஆங்கு வந்து குடியேறிக் கண்ண பிரான் திருவருளை முன்னிட்டு "இந்திரப்பிரஸ் தம்" என்கிற ஒரு புதிய நகரை ஸ்தாபித்து

இராசாக்களாலே செய்தற்கரிதான இராச சூய யாகத்தையும் செய்து முடித்தார்கள். இந்திர னது லோகத்தையும் ஈடு சொல்ல முடியாத இவர்களது இராஜ்ஜியத்தையும், இந்திரனது போகத்தையும் ஈடுகூற முடியாத இவர்களது இராஜரீகபோகத்தையும் கண்ட துரியோதனன் அழுக்காறு பூண்டு பாண்டவர்களை நய வஞ்சக மாகத் தன் நகருக்கு வரவழைத்து, தன் மாமனு கிய சகுனியை அவர்களோடு சூதாடுமாறு ஏவி, அவர்களது நாடு நகர் முதலிய அனைத்தையும் கவர்ந்துகொண்டு அவர்களது மனைவி திரௌ பதியையும் அடிமையாக்கினுன். அவளைச் சபை முன்னர் கொண்டுவரப் பணித்து, அவன் தம்பி துச்சாதனனைக்கொண்டு அவள் துகிலைக்களைந்து அவமானப் படுத்துமாறும் ஆக்ஞாபித்தான். அதுசமயம் ஆதரவற்ற பாஞ்சாலி "ஆ கண்ணு! துவாரகாபுரிவாசா" என்று ஸ்ரீ கண்ணபிரானைக் கருத்தில் நினைத்துக் கண்ணீர் வடித்துக் கதறி ஞள். அவளது பக்திக்கிரங்கிய பரந்தாமன் அக்கணமேபரிந்தருள அவளது ஆடைகோடிக் கணக்காக ஆங்கு வளரத்தொடங்கிற்று. துகி லைப்பற்றி உரிந்த துச்சாதனன் சோர்ந்து தரை யில் வீழ்ந்தனன். சூழ்ந்திருந்த அனைவரும் பயந்து துயரில் ஆழ்ந்தனர். இதனைக் கேள் வியுற்ற திருட்டுத்தனம் படித்த குருட்டுத் திரு தராஷ்டிரன் அப்படியேகிடுகலங்கிப்போனுன்.

உடனே பாஞ்சாலிக்கு நல்வார்த்தை சொல்லி, அவளது கோபத்தைத்தணித்து, அவர்கள் நாடு களை அவர்களுக்களித்து 'நீங்கள் செல்லுங் கள்' என்று கூறினுன். இதற்குள் துரியோ தனன் அதனை ஆட்சேபிக்கத் தருமர் தமது தருமத்தையே பணயமாக வைத்து, மறு சூதா டித் தங்கள் அடிமையைமீட்டி விடுதலையடைந் தார்கள். இவ்வளவோடு துரியோதனன் ஆட் டத்தை திருத்திஞன். "பாண்டவர்கள் மீண்டும் தங்கள் நாடு பெறவேண்டுமாஞல் பன்னிரண்டு வருஷம் வனவாசமும், ஒரு வருஷம் யாவருமறி யாவண்ணம்அஞ்ஞாதவாசமும்செய்யவேண்டும் என்றும் அந்த அஞ்ஞாதவாசத்தில் அவர்கள் கரந்துறையுமிடத்தை எவரேனும் கண்டு விட் டால் மறுபடியும் பன்னிரண்டு வருஷம் வன வாசமும் அஞ்ஞாத வாசமும் மாறி மாறிப் புரிந்து வரவேண்டும்" என்றும் கட்டளையிட் டான். சபையோர் அதனை ஆமோதிக்கவே திரௌபதியுடன் அவர்கள் வனவாசஞ் செய் யப் புறப்பட்டார்கள். அந்தோ! "குடை நிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர் நடை மெலிந் தோ ரூர் நண்ணினும் நண்ணுவர்" என்ற அதிவீர ராமன் வாக்கு இங்கு ஆயிரம் பொன் விலை பெற்றதாய் முடிந்தது. இம்மட்டோ! பஞ்சபாத கங்களிலும் தலைமை பெற்ற ஒன்றன்றோ சூது! பஞ்சபாதகங்களையும் அற்றவர்கள் அல்லரோ

பஞ்சபாண்டவர்கள்! அவர்களில் தலைவராயிருக்கிற 'தருமர்' என்னும் பெயரை உடையவர் இயற்கையிலேயும் தருமரன்றோ! அங்கனமிருந்தும் அவர்கள் இச் சூதாட்டத்தை விரும்பிய படியால் அன்றோ இக்கதிக்கும் ஆளாயினர்? இவற்றை எல்லாம் உத்தேசித்துப் பார்த்தால் ஆ! கொடிது கொடிது சூதே கொடிது. கொலை களவு முதலிய பாதகங்களுக் கெல்லாம் இச் சூதே காரணமாகும். இதுபற்றியேதான்,

"அறத்தைவேர் கல்லும் அருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்—மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ கோன்னே தெரிந்து" என்றும்,

"உருவழிக்கும் உண்மை உயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து" என்றும்

ஆன்றோர் இச்சூதை விரும்புவாரடையுந் தீதை இனிதே எடுத்து விளக்கி இருக்கின்றனர்.

இத்தகைய கவறுட்டத்தாலே குருநாட்டை இழந்த பாண்டவர்கள் காடும் வனமும் சென்று, கனியும் சருகும் தின்று காலத்தைக் கடத்தினர்கள். அவர்கள் பட்ட கஷ்டத்திற்கோ ஓர் கணக்கே இல்லை. அவை அனைத்தும் கண்ண பிரானது திருவருளாலும், அவர்களுடைய அருஞ் செயலாலும் ஒருவாறு நீங்கின.

என்ருலும் "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல தன்றே மறப்பது நன்று" என்றபடி துரியோதனுதியர் அவர்களுக்குச் செய்த பல தீமைகளை எல்லாம் அவர்கள் மறந்தாலுங் கூட அடிக்கடி காட்டிலும் பல கஷ்டங்களை அவர்கள் அனுபவிக்குமாறு இரக்க மின்றிப் பல இடையூறுகள் புரிந்து வந்த படியால் அச் செயல்கள் அவர்களை மறக்க விடாமல் செய்து வந்தன. துரியோதனனைப் பற்றித் துரோபதை மறந்தாலும் அவள் விரித்து வைத்திருக்கிற கூந்தல் அவளை மறக்க விடாமல் தடுத்து விட்டது. இதற்கிடையில் வருஷமும் பன்னிரண்டு கடந்து விட்டது. ஆனுல் பெரிய ஒரு வனவாசத்தின் காரியத்தைச் சிறிய ஒரு இரண்டே வாக்கியத்தில் நாமும் முடித்துவிட்டோம். என்ருலும் 'வனவாசம்' என்பது இலேசான காரியமா! இதில் நேரும் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் அனுபவித் தறிந்த அப் பாண்டவருக்கே யன்றி நம்மால் எவ்வாறு கூறமுடியும்! இதன்மேல் விராட நகர் புகுந்து மாறுவேடமணிந்து மறைந்துறையும் ஒரு வருடத்தையும் கழித்தார்கள். இங்கும் அவர்கள் பட்ட கஷ்டம் பலவென்றே சொல்லலாம். ஆயினும் இதன் காரணமாக ஐவருக்கும், விராட அரசனுக்கும் அன்னியோன்யும் ஏற்பட்டு, அதன் பயனுக அவ்வரசனது அருமைப் புத்திரியாம் உத்த

ரைகளுக்கும், அருச்சுனனது அருந்தவப் புதல்வ ளும் அபிமன்னியுவுக்கும் திருமணம் ஒன்று சிறப்புற நடந்தது. அவ் வைபவத்திற்குக் கண் ணபிரான், பலராமர், பாஞ்சாலன், சாத்தகி முதலியவரும் பல கொற்ற மன்னர்களும் வந்து குழுவினார்கள். திருமண வைபவம் முடிந்ததும் விராட வேந்தன் பாண்டவர்களுக்குத் தன்னைச் சார்ந்த உபப்பிலாவிய நகரத்தை இருக்கை யாய் அமைத்து, அவர்கள் விஷயத்தைப்பற்றி மேல் நடக்கவேண்டிய காரியங்களை ஆலோசிப் பதற்காக ஒருபேரவையும் கூட்டிவைத்தான்.

அக் குழுவினிடையில் முதன் முதல் கோபாலகிருஷ்ணன் தமது கருத்தை வெளியி டக் கருதி, அவையோரை நோக்கி "அருமை அரசர்களே! சூதினுல் கவர்ந்த நாட்டைச் சூதி னாலேயே பெறுவது முறையேனும் துரியோத னன் முன்னர் கூறியபடி பாண்டவர்கள் பன்னி ரண்டாண்டு வனவாசமும் ஓராண்டு அஞ்ஞாத வாசமும் புரிந்து வெளிப்பட்டாராகவே நியா யப்படி பாதி நாடு மட்டுமல்ல பரதநாடு முழு வதுமே இப் பாண்டவரைச் சார்ந்த தாகும். இருப்பினும் அவர்கள் அவ்வண்ணங் கருதா மல் அவன் கூறியுள்ளபடியே பாதிப் பாகத்தை மாத்திரம் கருதுவது மிகப் பாராட்டத்தக்கதல் லவா! ஆதலால் அவன் மொழிந்த கட்டுரைப்

படியே நடந்துகொள்ள அவன் இசைகின்ருனே அல்லது மறுக்கின்ருனே என்பதை ஒரு தூதின் மூலம் நாம் உணர்ந்து கொண்டு, மேல் நடக்க வேண்டுவனவற்றைத் தீர்மானிக்க வேண்டுமென்று நான் கருதுகின்றேன்'' என்றனர். இதனைக்கேட்ட பலராமர் ''பாண்டவர்களின் நாட்டைத் துரியோதனன் வழிமறித்து, வகை மோசஞ் செய்து, பறித்துவிடவில்லை. அரசருக்குரிய வாது போருக்கு ஒப்பதோர் சூது போராடித்தான் பாண்டவர்கள் நாட்டை வசப்படுத்திக் கொண்டான். இதில் ஒன்றும் மோசம் இல்லை. ஆகவே அவனிடத்தில் கேட்க வேண்டிய பாகத்தை மிகத் தயவாய்க் கேட்டுப் பெறுவதே உசிதமாயிருக்கும் என்று நான் நினைக்கிறேன்'' என்ருர். இதன் பின் சாத்தகி என்பான் ''நாட்டுக்குரியவர் பாண்டவரா யிருந்தும் நய வஞ்சகத்தால் கவர்ந்து கொண்டு அவருக்குப் பல இடையூறு புரிந்து வந்த துரியோதனனை 'நல்லவன்' என்று நீர் மெச்சிக் கொள்வதும், அவனிடத்துத் தயவாய்க் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று நீர் பேசிக்கொள்வதும் ஒரு சிறிதும் பொருந்தாதாகவே அதனை நான் ஆட்சேபிக்கிறேன். மேலும் சூது போரில் அவன் கவர்ந்த நாட்டை முன்னர் அவன் மொழிந்த வண்ணமே பாண்டவரைப் பணிந்து நல்லவார்த்தை கூறியும் நல்கானுகில் அவனை

மோது போரில் வென்று முழுப்பாகத்தையும் அடைவதே நியாயமாகுமென நான் கருது கிறேன்" என்றனன். இதனைக் கேட்ட சபை யோரெல்லாம் "சாத்தகி கூறிய வார்த்தையை நாங்கள் ஆமோதிக்கின்றோம்" என்று ஆரவா ரித்தார்கள். இதன்மேல் தருமபுத்திரர் "முத லில் முகுந்தபிரான் மொழிந்த வண்ணமே எதற் கும் ஒரு தூது அனுப்பி அவர்கள் அபிப்பிரா யத்தை அறிந்து கொண்ட பின்னரே மேல் நடக்கும் காரியங்களைப் பற்றி ஆலோசிக்கலா மென்று நான் நினைக்கிறேன்" என்றனர். அனை வரும் அதனை ஏக மனதாய் ஆமோதிக்கவே, கண்ணபிரான் முதலியவர்கள் உலூகமாமுனி வரைத் தேர்ந்தெடுத்துத் துரியோதனன் பால் தூது விடுத்து "முடிவறிந்து எமக்குத் தெரிவி யுங்கள்" என்று கூறி, ஐவர்பால் விடையும் பெற்றுத் தத்தம் அணிநக ரடைந்தனர்.

## அத்தியாயம் 2.

### துரியோதனன் துணிபு.

தூது சென்ற உலூகமாமுனிவர் துரிதமாய்ச் சென்று, அஸ்தினபுரியை அணுகித் திருதராஷ்டிரன் திருச்சபையைக் கண்டனர். முனிவரைக் கண்ட முடிவேந்தனும் மற்றைப் பேரவையோரும் முகமலர்ந்து, நல்வரவு கூறி, ஆசனமளித்து, அமரச் செய்து அவரது வரவின் செய்தியை வகையுடன் வினவினர். முனி சிரேட்டர் அரவக்கொடி வேந்தனையும் அரிய பெரியோரையும் நோக்கி, "அன்று நீங்கள் அவையின் கண் மொழிந்த ஆணையின் படியே ஐவர்கள் ஆரண்யஞ் சென்று ஆறீராண்டு வனவாசமும், அஞ்ஞாதவாசமும் கழித்து, அவர்களுக்குரிய அர்த்த பாக ராஜ்யத்தை இப்போது அவாவுகின்றனர். அதனை நீங்கள் 'கொடுக்கின்றீரோ அல்லது மறுக்கின்றீரோ' என்பதை அறிவதற்கே நான் இங்கு வந்தேன்" என்றார்.

இதனைக் கேட்ட துரியோதனன் முகம் திடீரென்று இருளடைந்து விட்டது. ஆயினும் ஒருவாறு இனிய முகங்காட்டி "அமைச்சர் முதலாயினோரிடம் ஆலோசனை செய்து முடிவு

கூறுவதாக வஞ்சனையாய்ப் பேசி அம்மட்டோ டும் நிறுத்தி விடாமல் ஐவர்கள் ஆண்மை யுள்ளவர்களாய் இருந்தால் நாட்டை அமர் புரிந்து வாங்குவதே அழகாயிருக்கும் என்றும் அங்ஙனமின்றேல் நாளுண்ட நாடு என்னுடை யதும், தாமாண்ட காடு தம்முடையதும் ஆவதே தகுதியாகும்'' என்றும் கூறினன்.

உடனே பீஷ்மர் விதுரர் துரோணர் கிருபர் முதலிய பலரும் அவரக்கொடியோனை நோக்கி, "ஆணை கடவாத ஐவர் பாகத்தை நீ அளிப்ப தில் இனி ஏதேனும் ஆட்சேபனை செய்தால் அழகிய பூமடந்தை நின்னை விட்டு நீங்க, நீயும் அதனை விட்டு நீங்குதல் சத்தியம். ஆகவே அட்டி கூருமல் ஐவரை அழைத்து அவருக் குரிய அர்த்த பாகத்தையும் இன்றே வழங்கி, அவருடன் அன்னியோன்யம் பூண்டு வாழக் கடவாய்'' என்று வற்புறுத்தினர். அவன் அவர் கள் வார்த்தையைச் சிறிதும் மதியாமல் அவர் களை இகழ்ந்தும் பேசத் தலைப் பட்டான். அவர் கள் "இது கெடுவது காட்டுங் குறி'' எனத் தீர் மானித்து இனிப் பேசுவதில் பயனில்லை என்று வாளாவிருந்து விட்டனர். வந்த முனிவர் இனி வற்புறுத்திப் பயனில்லை என்று கண்டு "ஏ துரி யோதனு! பாண்டவருடன் இனி நீ ஒற்றுமைப் பட்டு வாழ்வதை விடுத்து அவருடன் முன்

னரே போல் சூதுபோர் இயற்றினுலும் அல்லது மோதுபோர் இயற்றினுலும் இரு வகையிலும் அவர்களை நீ ஜெயிப்பதென்பது ஊமையன் கண்ட கனுப் போலாகும். நான் மொழிந்த இம் மொழி பொய்க்காது'' என்று கூறி எழுந்து சென்று பாண்டவரைக்குறுகி, நிகழ்ந்தனவற்றை விடாது நிகழ்த்தினர். இதனை அறிந்த தரும புத்திரர் இவ்விஷயம் முகுந்தனுக்கும் ஏனையோர்க்கும் எட்டுமாறு முயற்சி செய்தனர்.

உலூக முனிவர் இஃதுரைத்துச் சென்ற பின்னர் புறக்கண்ணைப்போன்றே அகக்கண்ணுமிழந்த பொருமையாளனுன திரிதராஷ்டிரன் "பாண்டவர்கள் இனி நம்மீது படை எடுத்து வருவது நிச்சயமென்று கண்டு, தனது புத்திரனும் பொருமைக்கொரு மித்திரனுமான துரியோதனனை நோக்கி "நம்மைச்சார்ந்த பல தேசத்து மன்னர்களுக்கும் 'ஐவர்கள் எம்மோடு அடுபோர்க் கெழுந்தால் நீங்கள் எமக்குப் படைத்துணையாய் வரத் தயாராயிருங்கள்' என விஷய மனுப்புமாறு கட்டளை இட்டுக் கண்ணனையும் நம் வசப்படுத்த விரைந்து செல்லுவாய்'' என்று யோசனை கூறி அவனை ஏவினன். அவனும் அங்ஙனமேசெய்து, துவாரகாபுரி சென்று, கண்ணன் சயன அறைக்குட் புகுந்து, அவர் அருச்சுனன், வரவு நோக்கிப் பொய்த்துயில்

கொள்வதுணராமல் அவர் திருமுடிக்கருகே இருந்த ஆசனத்திற் சென்றமர்ந்தான். பின்னர் அருச்சுனனும் அவரைத் தங்களுக்காகப் படைத்துணையாமாறு வேண்டிக்கொள்ளுதற்கு ஆங்கு வந்தவன் சரேலெனச் சென்று, சயன அறைக்குட் புகுந்து, அவர் திருவடிக்கருகே அணுகி நின்றான். இப்பொழுதுதான் விழித்துக்கொண்டவர்போல் கண்ணன் எழுந்து, கண்களைத் துடைத்துக்கொண்டு, எதிரே நின்ற அருச்சுனனைப் பார்த்து "வா அருச்சுனா! எப்பொழுது வந்தாய்?" என்றார். அதற்கு அருச்சுனன் "இப்பொழுதுதான் தங்களைப் படைத் துணையாக வேண்டி வந்தேன்" என்றான்.

"அப்பா! அருச்சுனா! எனக்கு நீங்களும், துரியோதனாதிகளும் இருவரும் இரண்டு கண்களே ஆவீர்கள். அப்படி இருக்க உங்களில் யாரை நான் கொள்ளுவது; யாரை நான் தள்ளுவது? இது விஷயமாகத்தான் உபப்பிலாவிய நகரத்தில் உன்னுடைய அண்ணா தரும புத்திரனும் நானும் பேசிக்கொண் டிருந்தோம். அவர் என்னையும் என்னைச் சார்ந்தோர்கள் அனைவரையும் தனக்காகப் படைத் துணையாமாறு வேண்டிக்கொண்டனர். நான் அது கூடாது என்று மறுத்து 'நான் மாத்திரம் உங்களைச் சேர்வேனென்றும், எனக்கீடாக என்

குலத்தோர் பதினுருயிரவவரையும் ஏன்? எனது அண்ணு பலராமர் உள்படத் துரியோதனுதியருக்கே நான் படைத்துணையாயனுப்ப நேரும்'' என்றும் உறுதிகூறி வந்திருக்கிறேன். நீயும் வந்து விட்டாய்; இனிக் குருகுலக் கொற்றவனுன துரியோதன மகாராஜனும் இது விஷயமாக யாரையேனும் அனுப்பக் கூடும்'' என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே கண்ணன் திருவடிக்கருகே நின்று இதனைக் கேட்டு வருகிற அருச்சுனன் கண்ணன் திருமுடிக்கருகே ஆசனத்தின்மீது வீற்றிருந்து இதனைக் கேட்டுக்கொண்டிருந்த துரியோதனனைச் சுட்டிக் காண்பிக்க, அவர் அப்பொழுதுதான் திரும்பிப் பார்த்து, ஆச்சரியமடைந்து "ஆ! வணங்காமுடி மன்னவ! செய்திவிடுக்காமல் நீ திடீரென்று வந்தது எனக்கு வியப்பாயிருக்கிறது. நின் வரவு நல்வரவாகுக! என எழுந்து அவனைத் தழுவிக் கொண்டு, நான் அருச்சுனனிடம் கூறி வந்த அனைத்தும் நீயுமா இங்கிருந்தபடி கேட்டுக் கொண்டிருந்தனை?'' என்று வினவினுர்.

"ஆம், நானுந்தான் கேட்டுக்கொண்டிருந்தேன், இனி நான் தங்களிடத்திற் கேட்டுக் கொள்ளவேண்டிய விஷயம் ஒன்றுமே இல்லை'' என்று சிறிது சிந்தித்து, "நந்தகோபாலா! பாத்தியமேயற்ற பாண்டவர்கள் தங்களுக் கேதோ

பாத்தியமிருப்பதாக வீணைசை கொண்டு, இப் போரைத் தொடங்குகிறபடியால் யுத்த களத்தி னிடையில் தாங்கள் எங்களுக்கு விரோதமாக ஆயுதமெடுத்துச் சண்டை செய்யக் கூடாது. இந்த ஒரு வரத்தையும் தந்தருளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். "அப்படியானால் அருச்சுனா! என்னால் உனக்கு யாதொரு பயனு மில்லாமல் போயிற்றே" என்று, கண்ணபிரான் காண்டீபனை நோக்கினார். அதற்கவன் "கோபால கிருஷ்ணா! தேவரீர் எனது தேரின் முன்னர் வீற்றிருந்து சமயோசிதமாக அதனைப் போர் முனையில் நடத்தினாலே போதும், அடியேன் அந்த விண்ணுலகத்தையும், இந்த மண்ணுல கத்தையும் சேர்த்து ஜெயம் பெறுவேன்" என்று விளம்பினன். இதைக் கேட்ட துரியோ தனன் திடீரென்றெழுந்து, எம்பிரானிடத்து விடை பெற்றுக்கொண்டு, பலராமரிடத்திற் சென்று, நடந்த வரலாறு கூறி, அவரையும், அவர் சேனைகளையும் அஸ்தினாபுரம் வருமாறு கட்டளை இட்டு ஊரையணுகினான். திருதராஷ் டிரனிடத்தில் கண்ணன் தவிர அவர்படைகளும் பலராமரும் நம்மைச் சாரும்படி வாக்குறுதி பெற்றுவந்தேன்" என்று விளம்பினான்.

இது கேட்ட குருடன், "அப்பா! துரியோ தனா! நீ மோசம் போனாய்! பரந்தாமன் பார்த்

தனுக்குச் சாரத்தியம் செய்தாலும் போதும். அவரை வெல்வது அரிதாக முடியுமே! ஆகையால் இப் போரை நிறுத்திப் பாண்டவரை மீண்டும் வனத்திற்கே விரட்டுதற்கான ஒரு யோசனை தோன்றுகிறது. அதனையும் செய்து பார்த்து விடுவோம்" என்றான். பிறகு தத்துவ ஞானியாகிய சஞ்சய முனிவரை அழைத்து, "நீர் பாண்டவர் பக்கமணுகி அவர்கள் உலகாசையை வெறுத்து வனவாசம் புரிந்து துறவறம் பூண்டு திரியுமாறு அவர்களுக்கு ஞானோபதேசஞ் செய்து வரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். அவரும் 'ஆஹா! அப்படியே' என்று அப்பொழுதே புறப்பட்டுவிட்டனர்.

காகுத்தனும் காண்டீபனும் உபப்பிலாவிய நகரம் வந்து புகவும் சஞ்சயமுனிவரும் அங்கு தோன்றப் பரந்தாமனும்பாண்டவரும் அவரை வரவேற்று உபசரித்தனர். வஞ்சகச் சித்தராம் சஞ்சயமுனிவரும் "மாயா உலகம் ஓயாது கலகம்" என்று கூறிக்கொண்டே முரசக் கொடியோனை நோக்கி, "தரும புத்திரரே! முன்னர் நீர் நாடாண்டதை விடுத்துப் பின்னர் நீர் காடாண்ட காரணத்தினால் 'மானிடப் பிறவி எடுத்ததின் பயனாகிய பாரமார்த்திக பரிபக்குவ நிலையை அடைந்து, முற்றத் துறந்த முனிவர்களாய்த் துலங்குகின்றீர்கள். இனி இந்த நிலை

யற்ற செல்வமாகிய அரசுரிமையை நீங்கள் நினைக்கவும் மாட்டீர்கள்' என்று நான் நினைத்திருந்தேன். அதற்குமாறுதலாக நீங்கள் உங்கள் தம்பிமார்களுடன் போர் தொடுத்துக் கொலைத் தொழில் புரிந்து, கேடுசெல்வமாகிய இந்த நாடுபெறப் பிரயத்தனப் படுவதாகக் கேள்விப் பட்டேன். இது என்ன பரிதாபம்! காசிக்குப் போயும் ஒருவன் கருமந்தொலைக்காமல் திரும்புவதுண்டா! கட்டியமுதம் கரை புரண்டோட எட்டிக்காயையும் இச்சிப்பாருண்டா! அந்தோ அதுபோலன்றோ நீங்கள் பேரின்பவீடு பெறத் தக்கவராய் நின்றும், கேவலம் பெருந் துன்ப நாடுபெறக் கருதி வந்தீர்கள்? இனித் 'தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றையவர்' என்ற வாசகத்தை மறவாமல் நீங்கள் இப்பொழுதே மாதவம் புரியச் செல்லுங்கள். அதுதான் சாஸ்வதம்'' என்று உபதேசிக்கலானார். இவ் உபதேசத்தைக் கேட்ட தருமர், ''சுவாமி! அருந்தவம் புரிவது தம்மைப் போன்ற முனிவர்தங் கடமை; அரசினை ஆள்வது எம்மைப் போன்ற சத்திரியர் கடமை. யார் யார் எவ்வெக் கடமைக் குரியவரோ அவ ரவர் அவ்வக் கடமையைச் செய்துதான் தீர வேண்டும். அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந் நான்கும் எஞ்சாமை வேந்தர்க் கியல்பன்றோ!'' என்று வினவினர். இதற்குள் வீமன், அம் முனி

வரை நோக்கி "நீர் கூறும் இவ் உபதேசம் அனைத்தும் அக் கூற்றுவனூர் [illegible] நூற்றுவற்கே பொருந்தும். அறநெறி கடவா எங்களுக்கு நீர் இம் மறநெறி கூற வந்தது அழகே! பகைவருடலைச் சிதைத்து, அவர் தம் இரத்த வெள்ள நீராடித் துரியோதனன் முதலிய நூறு யாகப் பசுக்களையும் கொன்று, தேவர்களுக்கு அவிர்ப்பாகஞ் செய்து, வேள்வி ஒன்று முடித்தற்கே பாண்டவர் விரும்புகின்றனரென்று நீர் சென்று மறவாமல் அவர்க்குரையும்" என்று கூறினன். கண்ணபிரான் அவனைக் கையமர்த்தி, முனிவரை நோக்கிக் "கொல்லர் தெருவிலே ஊசி விற்க வருபவனைப் போன்று நீர் எல்லாரிடத்திலும் உமது தத்துவ ஞானத்தை விஸ்தரிக்க வந்தால் அது செல்லுமா? இனி நீர் இங்கு நில்லாதீர்" என்று போமாறு சைகை காட்டியருளினர். இதன்பின் முனிவர் இருக்கைவிட்டெழுந்ததை எல்லோரும் கண்டனர். ஆனால் அவர் "எவ்வழிச் சென்றனர்; எப்படிச் சென்றனர்" என்பதை எவருமே கண்டிலர். ஏன்? மாயை என்றவர் மாயமாய்ச் சென்றனர்.

பின்னர் தருமர் சாட்சாத் கிருஷ்ண பரமாத்மாவை நோக்கி, "எம்பிரானே! எங்கட்குரிய துணை தேவரீரேயன்றி வேறு யார்? நாங்களும் கௌரவரும் கேவலம் ஒரு நாடு சம்பந்த

மாகப் பெரும் போரியற்றி, இருதிறத்தாரும் சமரில் மாள்வது சரியன்று. ஆகவே சமாதானத்தில் நாங்கள் தரணியாளுமாறு அருள் புரியக் கடாட்சிப்பதும் தாங்களே! இனியோர் முறை தாங்களே நேரிற் சென்று, எமது தாயபாகத்தைத் தந்து விடும்படி கேட்பீராளுல் அவன் 'தருவானேயல்லாமல் தடைசொலான்' என்று என் மனதிற் படுகிறது" என்ருர். அதற்குக் கண்ணபிரான் "நல்லது, நான் அப்படியே செல்லுகிறேன் என்றும், அவனும் அவன் கூறியுள்ளபடி பாதி நாடு கொடுத்து விடுகிருனென்றும் வைத்துக்கொள்ளலாம். அப்படியாளுல் முன்னர் நீங்கள் செய்திருக்கிற சபதம் எவ்வாறு தீர்வது என்பதையும் நாம் சிந்திக்கவேண்டாமா" என்று வினவினுர். அதன் பின் தருமர் சிறிது சிந்தனையில் ஆழ்ந்தவராய் ஒருவாறு துணிந்து "ஒரு வேளை அவன் சம்மதிக்காவிட்டால் துணைவரையும் கிளைஞரையும் கொன்றல்லவோ தொல்புவி ஆளவேண்டி வரும். அதனை விடச் சஞ்சயமுனிவரிடத்து என் பெரிய பிதா கூறியபடியே தார்வனமடுத்துச் சருகுவேர் புசித்துத் தவமும் புரிந்து நற்கதி பெறுவதன்ருே சாலவும் சிறந்தது! ஆதலின் தாங்கள் எமது தாயபாகத்தை முதலில் கேளுங்கள். அவன் தருவதற்கு அட்டி சொன்ஞல் தனித்தனியே ஐந்து நகரமாயினும் தர

வேண்டுங்கள். அதற்கும் இசையாவிடில் ஐவரும் அவர் தந்தையின் பேர் மங்கிப்போகாமல் இருந்து வசிப்பதற்காக அவர்கள் நாட்டில் ஐந்து வீடேனும் தருக என்று விரும்புங்கள். அதனையும் அவன் மறுத்தால் அடுபோர் வேண்டித் திரும்புங்கள்'' என்று தமது அபிப்பிராயத்தை அனைவருமறியக் கூறினர். இங்ஙனம் கூறவே எழுந்தான் வீமன். இவனுக்குக் கோபத்தீ நெய்விட்டெரியும் நெருப்பே போல் கொதித்தெழுந்தது. உடல் பதறிற்று, முகம் வியர்த்து வெளிறிற்று, நா குளறிற்று, பார்த்தான் தருமரை. ''அண்ணு! தாங்கள் ஏதோ அந்த நாளிருந்து இந்த நாள்வரை பொறுமை ஒன்றையே பூஷணமாகப் பூண்டு வறுமையைச் சகித்தும் பெருமை அடைந்து வருகிறீர்கள். என்ருலும் அதனுல் நாங்கள் அடைந்து வருகிற இச் சிறுமையையும் சிறிது சிந்திக்க வேண்டாமா? இது தங்களுக்குப் பாவமல்லவா! அந்தோ! பேரவையில் அன்று, நம் பாஞ்சாலி நின்று, 'என் மானங்காப்பவர் இல்லையா' என்று, கண்ணீர் விட்டுக் கதறிய போது எனது கண்கள் கதையினைப் பார்க்கவும், காண்டீபன் கண்கள் சிலைதனைப் பார்க்கவும் அது சமயம் 'பொறு பொறு' என்று எங்களைத் தடுத்து நமது குரு குலத்திற்கே ஒரு பெருங் குறையைத் தேடி வைத்தீர்கள். இன்னுமா நமது சபதத்தைப்

பற்றியே சிந்தியாமல் சமாதானத்தையே கருது கின்றீர்கள்? அம்மம்ம! அந்தத் துரியோதன னுடைய கொடுமையைப் பார்க்கிலும் தங்கள் பொறுமையே மிகக் கடுமையாய் இருக்கிறது. இனிச் சகிக்க முடியாது. எனக்கு விடை கொடுங்கள்; ஒரு நொடிப்பொழுதில் இப் படி மீது தங்களுக்கு முடிசூட்டி, தங்கள் தம்பிமார் களாகிய அந் நாற்றுவர்க்கும் சுவர்க்கலோகக் கொடிகாட்டி வந்து சேருகிறேன்.'' என்றான். தருமர் அவனைக் கையமர்த்தி, தம்பி வீமா! சாம பேத தானம் என்கிற மூன்று வழியிலும் நாம் முயன்று, அது முடியாவிடிலன்றோ நீ கூறியபடியே தண்டம் என்கிற சமர்த்தொழில் தக்கதாகும்? ஆயிரம் இருப்பினும் அவர்களும் நமது சகோதரர்கள்தானே! கைதவறிக் கண் ணில் பட்டால் அதற்காகக் கையையே களைந் தெறிவாருண்டா! கேவலம் ஓர் நிலத்தின் காரணமாக அண்ணன் தம்பி அவர்களே நின்று போராடி மடிந்தார்கள் என்றாவது, அல்லது மடித்தார்கள் என்றாவது பேரெடுப்பது நமக் குப் பெருமையாகுமா? நீயே யோசித்துப்பார்'' என்று கூறி அவனது சினத்தை நீக்கினர். பின்னர் அருச்சுனன் எழுந்து "அண்ணா! இது வரையும் நாம் பொறுத்தது போதாதா! இன் னும் பொறுத்தால் நாம் பகைமுடிப்பதெப்படி! நமது பாஞ்சாலி இனிக் குழல் முடிப்பதெப்படி!

அன்று அரவக்கொடியோன் அரசமன்றிலே நம்மை அடிமையாக்கி, அருந்துதி ஒப்பதோர் அருங்கிளியை அனுதியாக்கி, அவமானப்படுத்த எத்தனித்தபோது "பாண்டவர் மாண்டவர் ஆயினர்" என்று பாரோர் பழிக்குமாறு 'பொறு பொறு' என எம்மைத் தடுத்தீர்கள். அது சமயம் 'கண்ணபிரான் கருணை புரியாவிடில் நம் கதி என்னுகும்!' என்பதையேனும் நாம் எண்ணவேண்டாமா? இனி அவனிடத்தில் போர்புரியாமல் பூமிபெற நினைப்பது கண்ணில்லாமல் கதிரவனைக்காண்பது போலாகும்" என்று கனன்று கூறினன். நகுலனும் எழுந்து நாரணனையும் தருமரையும் பணிந்து, அண்ணு! ஆண்மையுள்ள அரசர்கள் அவனி காரணமாக அடுபோர் தொடுப்பதுதான் முறையேயன்றி, ஐயம்புகுந்து ஐவருக்கும் ஐந்து வீடேனும் அருளினல் போதுமென்று அவனிடத்தில் யாசகம் புரிவது அழகன்று" என்று கூறி அமர்ந்தான். அதன் பின்னர் "இனிச் சகாதேவனும் எழுந்து, ஏதேனும் சாற்றக்கூடும்" என்றுஎதிர்பார்த்திருந்த கண்ணபிரான் அவன் எழாமலும் பேசாமலும் இருந்து விட்டதைக் கண்டு "சகாதேவா! இது விஷயத்தில் உன்னுடைய அபிப்பிராயமும் தெரிந்து கொண்டால் நலமாயிருக்குமே!" என்று நவில. அதற்கவன் "மாயாவதாரனே! 'தேவரீர் தூது போனலும்

போகாவிட்டாலும், நாடு பெற்ருலும் பெருவிட்டாலும், எங்கள் சபதம் முடிந்தாலும் முடியாதொழிந்தாலும், துரௌபதி விரிகுழல் முடித்தாலும் அல்லது இப்படியே விரித்தபடி இருந்தாலும் பலன் ஒன்றே' என்பதுதான் அடியேனது அபிப்பிராயம்'' என்று கூறினுன். இதனைக் கேட்ட எம்பெருமான் 'இதில் ஏதோ சூதிருக்கிறது என்று கண்டு, அவனைத் தனியே அழைத்து, "அப்பா சகாதேவா! நீ கூறியவற்றில் ஏதோ பொருள் புதைந்திருக்கிறதாக நினைக்கிறேன். அதனை வெளியிட்டால் அதன்படி நடத்துவோம். கூடுமாஞல் போரையும் நிறுத்துவோம்'' என்று வினவினர். வினவவே சகாதேவன் புன்முறுவல் காட்டி, "தேவரீர் துஷ்டரைச் சங்கரித்து, இஷ்டரைப் பரிபாலிக்கவே ஈங்கு எழுந்தருளி இருக்கின்றீர். ஐவரையுமே அழிப்பதற்கு உங்கள் அந்தரங்கம். அப்படி இருக்க இப்போரை நிறுத்தமுடியுமோ? ஆனுல் கர்ணனை இன்று மண்ணுளமுடிசூட்டி, அருச்சுனனைக் கொன்று விண்ணுளும்படியோட்டி, பாஞ்சாலியையும் மொட்டை அடித்து, உம்மையும் கால்விலங்கிட்டுப்பிடித்து, சிறையிலடைத்து விட்டால் இப்பாரதப்போர் நடவாமல் நிறுத்தலாம்'' என்று கூறினுன். இதைக் கேட்ட காகுத்தன் திடுக்கிட்டுப் போய், "அப்பா சகாதேவா! நீகூறிய அனைத்தினையும்

உன்னால் செய்யக் கூடுமானாலும், என்னை விலங்கிட்டுக் கட்டிச் சிறையிலடைப்பது எப்படி?" என்று வினவினர். "தயிரையும் வெண்ணெயையும் பாலையும்தேடி, தையலர்கை மொத்துண்டு தாமங்கு வாடி, ததிபாண்டன் மனைசென்று சாடிக்குளோடி, சாமி எனைவிடு சரணம் தருவனென்று பாடி, முன்னர் பரிந்து, ஏன்? பணிந்து கெஞ்சியதையும் நீர் மறந்தீர்போலும்!" எனக் கூறிக்கொண்டே சகாதேவன் சாட்சாத்கார சொரூபத்தை மனச் சிறையில் வைத்து, மந்திரத்தை உச்சரித்து, உடனே உருப்போடத் தொடங்கினன். இவரும் அவன் மந்திரத்தில் கட்டுப்படாவண்ணம் ஆயிரம் வடிவு கொண்டு, அங்கும் இங்கும் ஓடிப் பார்த்தார். ஓடி என்ன பயன்! ஒன்றும் நடக்கவில்லை. கண்ணபிரான் கண்ணிரண்டும் பிதுங்குமாறு சகாதேவன் மந்திரம் அவரைக் கட்டிப் பிணித்தது.

"அப்பா என்னை விட்டுவிடு" என்று பகவான் கூறினர். "ஐவரையேனும்காக்கின்றேன் என்று ஆணை இடும்; உம்மைவிட்டுவிடுகிறேன்" என்று சகாதேவன் மீறினன். நல்லது என்று வாக்களித்தார் நாராயணன். பின்னர் இருவரும் வெளியே வந்து, "நான் தூது புகுந்து, அவன் கருத்துணர்ந்து, பின்னர் ஆவதைப் பற்றி ஆலோசிக்கலாம்" என்று ஆங்குள்ளோரிடத்

தில் அனுமதிபெற்று, இரதத்திற்சென் றேற நடந்தனர். இதற்குள் கண்கலக்கத்தோடு பாஞ் சாலி கண்ணபிரான் முன்னர் வந்து நின்ருள். நின்றவள் நெடியோனை நோக்கி, "அண்ணு! 'பெண்ணென்ருல் பேயும் இரங்கு மென்று ஒரு பழமொழி உண்டு. ஆனல் என் விஷயத்தில் இதுவரை அது பொய்த்தே விட்டது' என்று நான் நினைப்பதற்கும் இடமுண்டு. ஏனென்ருல் அன்று அஸ்தினபுரியில் அரும்பெருஞ் சபை யில் என்னை அவமானப்படுத்த எத்தனித்த போது ஐயோ! தருமர் மனத்தில் பொறுமை இருந்தது. வீமன் கரத்தில் கதையொன் றிருந் தது. விசயன் கரத்தில் வில்லும் இருந்தது. இருந்தென்ன செய்யவோ? உங்கள் மனத்தில் தங்கை என்கிற உரித்து ஒன்று இருந்தலவோ என் கற்பை உயர்வு படித்திற்று? இன்று 'ஒத்து வாழ்வதே உயர்வு' என்பதாகத் தருமரும் தாங்க ளும் சாசுவதப்படுத்தி, என் சபத்தையும் அலட் சியமாகத் தள்ளி வைத்துவிட்டு, அத் துரியோ தனன்பால் தூது நடக்கவும் துணிந்து விட் டீர்களே! இனி என்கதி எவ்வாருவது?" என்று ஏங்கிஞள். ஏங்கிய ஏந்திழையை எம்பெருமான் இனிதருளி "தொல்லாண்மைப் பாண்டவர்க்குத் தூது போய் மீண்டதன்பின் நல்லாய்! உன் பைங்கூந்தல் நானே முடிக்கின்றேன்" என்று கையமர்த்தி, கவலை யொழித்துச் சென்றனர்.

## அத்தியாயம் 3.

### துளபமால் தூது.

---

சென்ற திருமால் தேரில் அமர்ந்தனர்; தேரும் விரைந்தேகி அஸ்தினபுரி அமர்ந்தது. துரோணர்,விதுரன்,முதலியோர் எதிர்சென்று, அவரைத் தொழுது நின்று, உபசரித்தனர். எல்லோருக்கும் திருமால் நல்லுரை வழங்கி, விதுரன் அகத்தில் விருந்தாய் இருந்தனர். "பாற்கடலையும் பன்னகப் பாயையும் பச்சையாலிலையையும் அடியேனது சிறு மனையையும் எம்பெருமான் ஒன்ருகக் கொண்டதற்கு யான் புரிந்த தவமே பெருந்தவம்" என்று விதுரன் களித்தான். விருந்தும் அளித்தான். அன்று இரவு ஆங்கு கண்வளர்ந்து, காலையில் எழுந்து, கௌரவரது பேரவை நோக்கிக் கடவுளரும் காண்பதற்கரிய கால்பெயர்த் தருளினுர் காகுத்தன்.

கண்ணன் வரவைக் காதினுற் கேட்ட துரியோதனன் அவையோரை நோக்கி, "மாயன் இங்கு வந்தால் அவனை நீங்கள் வரவேற்கலாகாது" எனக் கட்டளை இட்டான். அவனது கட்டளையை மறுக்க முடியாமல் அவையோர் மௌனஞ் சாதித்து வாளாவிருந்தனர். இருந்தென்ன! கண்ணன் அங்கு எழுந்தருளவும் அனைவரும் எழுந்து அவரை உபசரித்து, ஆச

னமளித்து அமரச் செய்தனர். இதனைக் குறிப் பாலறிந்த அரவக்கொடியோன் அங்கு மிங்கும் அசையாமலும், நிமிர்ந்து குனியாமலும் சிம்மா சனத்தின்மேல் சிங்காரித்து வைத்த ஒரு பொம் மையைப் போலவே இருந்தபடி இருந்துவிட் டான். இதனை அறிந்த கோபாலகிருஷ்ணன் அக் கோமானை நோக்கி "வணங்கா முடி தரித்த மன்ன! வனவாசமும், அஞ்ஞாதவாசமும் முடித் துப் பாண்டவர் வந்து விட்டனரே! அவருக்குச் சேரவேண்டிய தாயபாகத்தை நீ நியாயப்படி பகிர்ந்து கொடுத்து, அவருடன் ஒன்றுபட்டு வாழ்ந்தால் அதில் உனக்கு உயர்வும் புகழும் உண்டுமே!" என்று உரைத்தனர்.

இதனைக் கேட்ட துரியோதனன் "இல்லா விட்டாலோ?" என்று இறுமாந்து வினவினன். "இல்லாவிட்டால் போரே நிகழும்" என்றார் இறைவன். "அப்படியா! அப் போரே நிகழட் டும். நிகழ்ந்து அதில் வீரமும் வெற்றியும் பெற் றவரே பாரை ஆளட்டும். இதற்கென்ன பஞ்சா யத்து?" என்று பகர்ந்தான் பார்வேந்தன்.

"அப்படிச் சொல்லாதே! ஐந்து ஊரே னும் அவருக்கு அளித்தால் அதிலும் உனக்குப் பெருமை உண்டு" என்றார் பெருமான்.

"பேசவேண்டாம்! ஐந்து ஊரல்ல; ஐந்து வீடேனும் அல்லது ஐந்து ஈ இருக்குமிட

மேலும் அப் பஞ்சவர்க்கு நான் என் மனதார ஈயேன்; 'இது உறுதி' என்று மறுத்துரைத்தான் மன்னவன். உரகக்கொடியோய்! நீ உறுதி கூறி விட்டதும் சரியே! ஆயினும் இன்னுமோர் தடவை உன்னை நான் கேட்டுக் கொள்கிறேன். சிறிது நேரம் நீ உற்றுணர்ந்து, அதன் பின் நீ இந்த உறுதி கூறு. என்றார் எம்பிரான். "திரும்பத் திரும்பக் கூறுபவன் நானல்லவே!" என்று செப்பினன் திருதராஷ்டிரன் சேய்.

"அப்படியானால் நாளை அடுபோருக்கு நீ ஆயத்தமாய் இருப்பேனென்று யாவருமறியக் கை வழங்குவாய்" என்றார் காகுத்தன்.

"தரணி முழுதும் புகழடைந்த சந்திர குலத்தில் தோன்றிய என் முன் ஆயர் குலத்தில் புகுந்து ஆவினம் மேய்த்துத் திரிந்த நீவிர் அறைந்ததும் அழகே! யானைக்குச் சிங்கம் அஞ்சி ஒதுங்குமோ? அது போல் ஐவருக்கு நானோ அஞ்சி ஒதுங்குபவன்? இல்லை! இல்லை! அதைப் பற்றி ஏதும் ஐயம் வேண்டாம்" என்று அகங்கரித்துப்பேசினன் அரவக்கொடியோன். ஞாலமுண்ட நாயகன் "ஐவர் கருத்தும் இனிச் சாலப் பொருந்திற்று" என மகிழ்ந்து சபையிலிருந்தெழுந்து விதுரன் அணி மனை புகுந்தார்.

இதன் பின்னர் துரியோதனன் விதுரனை நோக்கி "நீ என் பிதாவுடன் பிறந்து, என்

சோற்றையே தின்று எனக்கெதிரிகளான பாண்டவர்களுக்கே பட்சமுள்ளவனாக இருந்திருக்கிறாய். இது மாத்திரமா! அவருக்காக நாடு வேண்டித் தூது வந்த அந்த நாரணனுக்கும் விருந்தளித்திருக்கிறாய். நீ என்றும் எனக்குஎதிரியே'' என்று இழிந்து கூறினான். இவன் இங்ஙனம் கூறவே விதுரனுக்குக் கோபம் மூண்டு "ஹே பேராசை பிடித்த பேயே! 'குரு குலத்தில் பிள்ளையைத் தந்தை கொன்றான்' என்கிற குறைவு நேருமே'' என்ற ஒரு காரணம் பற்றி, மூவரில் ஒரு மூர்த்தியாயும், அந்த மூவருக்கொரு மூலமாயும் நின்ற முகுந்தனையும் என்னையும் இவ்வாறு மொழிந்த நின்னை இன்று முடிக்காமல் விடுத்தேன். இதோ என் வில்லையும் ஒடித்தேன். இனி உனக்கு நான் துணைவனுமன்று; விரோதியுமன்று, நீ தொலை'' என்று கூறிக்கொண்டே தன் சிலையை ஒடித்தெறிந்து, சரேலென விதுரன் வீடு சென்று ஆங்கு முகுந்தனைக் கண்டு, நடந்த வரலாறு முழுதும் கூறினான்.

அன்று இரவே துரியோதனன், கர்ணன் சகுனி முதலியவரோடு கலந்து, தூது வந்த வாசுதேவனைச் சூது செய்து கொன்றேவிடுவது எனவும் தீர்மானித்தான். தீர்மானித்தபடியே சபையின்மத்தியில் படுகுழி ஒன்று வெட்டினான். அதனுள் கொடிய படைகளையும் மல்லர்களையும் நிறுத்தி அதன்மீது மெல்லிய குச்சிகளைப்

பரப்பினுன். ஓர் விசித்திரமான ஆசனமமைத்து அதனை அலங்கரித்தான். மறுநாள் அச்சுதனை வரவழைத்து, அதில் அமரும்படி வேண்டிக் கொண்டான். அவரும் வந்து அதில் அமரவே அது 'நெறுநெறு' வென முறிந்து, அடியில் வீழ்ந்தது. வீழவே நெடுமால் விண்ணும் மண்ணும் வளர்ந்து குழியினுள் இருந்த வீரரை எல்லாம் மிதித்து வதைத்தனர், அவையிலிருந்தோர் அனைவரும் அஞ்சி நடுங்கி, "ஆரணனே அரனே முனியேல், காரணனே கருணை முனியேல், மாதவனே மாயா முனியேல், யாதவனே அபயம் முனியேல்" என அவர் திருநாமங்களைச் சொல்லித் துதித்தனர். அவர்கள் துதிக்கிரங்கிய துளவோன் நிமிர்ந்த உருவினைக் குறுக்கிப் பண்டுபோல் நின்றருளி, ஆங்கு அஞ்சாதமர்ந்திருந்த துரியோதனனை நோக்கி "நின்னையும் நின் குலத்தையும் இந் நிமிடமே மாய்த்திருப்பேன். ஆனல் 'நான் உனக்கு எதிரியாய்ப் படை எடேன் என்று பகர்ந்த வாய்மையும், பாண்டவர்கள் பண்டு கூறியுள்ள சபதமும் பழுதாமே' என உன்னை உயிருடன் விடுத்தேன். நீயா என்னைக் கொல்ல நினைப்பவன்! நீதியற்ற நின் சபையில் இனி நான் நிற்பதும் தகுதியன்று" என்று மொழிந்து விரைந்து சென்றனர். சென்றவரைத் தொடர்ந்து பீஷ்மர் துரோணர் அசுவத்தாமன் முதலிய அனைவரும் செல்ல ஆங்கு

கர்ணனை நோக்கி, அவன் பிறப்பின் இரகசியத்தைக் கூறிப் பாண்டவர் பக்கம் சேரப் பகர்ந்தனர். அதனைக் கேட்ட கர்ணன் ஆச்சரியம் அடைந்து "பெருமானே! இன்றே என் பிறப்பு உணர்ந்தேன். என்ருலும் இனி என் செய்வது! இதுகாறும் அரவக் கொடியோனது அன்னத்தையும் ஆடையையும் உண்டு உடுத்தி வளர்ந்து வந்த நன்றி மறந்து, நானினிப் பாண்டவர் பக்கஞ் சார்வேனுனல் உலகம் என்னைப் பழிக்குமன்றோ? ஆதலின் என் ஆருயிர் இழப்பினும் இழப்பேனே அல்லாமல் ஆண்மை இழக்க நான் ஒருப்படேன்'' என்று கூறி அவரிடத்தில் விடை பெற்றுச் சென்றனன். அதன் பின்னர் அசுவத்தாமனை அழைத்து, ஆகாயத்தைக் காண்பித்து "பொழுதென்ன'' வென்று வினுவி, வினுவிய வண்ணமே விரலணியைப் பூமியின் கண் நழுவ விட்டனர். அவன் ஆகாயத்தைப் பார்த்துப் பொழுதைப் பற்றிக் கூறிக்கொண்டே கீழே குனிந்து, விரலணியை எடுத்து, விமலன் கையில் தந்தனன். அவர் அதை வாங்கிக் கொண்டு விடை பெற்று, விதுரன் வீடு சென்றனர். இதனைப் பார்த்துக்கொண் டிருந்த பாம்புக் கொடியோன் "அசுவத்தாமன் ஆகாய வாணி பூமாதேவி அறிய ஐவர்பக்கம் சார்வதாக ஆணையிட்டுத் தந்து விட்டான். ஆகவே இனி அவனை நான் நம்பமாட்டேன்'' என்று ஆங்

குள்ளவர் நம்ப அவரிடத்தில் நவின்ருன். இதனைக் கேட்ட அசுவத்தாமன் "இதுவும் கண்ணபிரான் சூழ்ச்சி" எனக்கருதி வாளாவிருந்தான்.

இங்ஙனமாக விதுரன் மனைசென்ற கண்ணபிரான் விண்ணவர் கோனுகிய இந்திரனை விரைந்தழைத்து, இனி நடக்கும் மாபாரதப் போரில் நின் மகன் அருச்சுனனைக் கர்ணன் கொல்வதாகச் சபதம் செய்திருக்கிருன். அவன் நினைத்தால் அங்ஙனமே கொல்லவும் கூடுமன்ருே? ஆகையால் நீ இப்பொழுதே ஒரு வேதியனைப்போல் வேடம்பூண்டு, கர்ணனிடஞ் சென்று, கவசகுண்டலங்களையும், சிகாமணியையும் கவர்ந்து வருவாயானுல் நின் மகன் பாரதப் போரில் பிழைக்கக்கூடும்" என்று பகர்ந்து அவனை அனுப்பினுர். அவனும் வேதியவடிவு கொண்டு, கர்ணனிடத்தில் சென்று, கவசகுண்டலங்களையும், சிகாமணியையும் யாசித்தான். 'இல்லை' என்று கேட்பார்க்கு 'இல்லை' என்று சொல்லாமல் ஈயக்கூடிய கொடையாளியாகிய கர்ணன் இந்திரனுகிய வேதியன் கேட்டபடி ஈய்ந்தனன். அவற்றைப் பெற்ற இந்திரன் கண்ணபிரான் இடம் வந்து, கவசகுண்டலங்களைக் காண்பித்து, விடை பெற்றுக்கொண்டு விண்ணுலகஞ் சென்ருன். இதன் பின்னர் கோவிந்தன் குந்திதேவி இல்லம் புகுந்து "அத்தையே!

தின் அருமை மக்களாகிய ஐவருக்கும், அரவக் கொடியோன் முதலிய நூற்றுவருக்கும் அடு போர் தொடங்கிவிட்டது. ஆனால் அருச்சுனனைக் கர்ணன் கொல்லுவதாக வஞ்சினங் கூறி இருக்கிறான். அவனிடத்தில் 'அருச்சுனனைக் கொல்வேன்' என்று ஓர் பலத்த பாம்புக்கணையும் அணுகி இருக்கிறது. இதற்கென் செய்வது?" என்று வினாவினார். இதனைக் கேட்ட குந்தி-தேவி கண்ணீர் விட்டுக்கதறிக் "கண்ணா! உனது திருவருள் கிட்டுமேல் என் மகன் அருச்சுனன் அந்தக் கர்ணனைக் கொல்லானோ?" என்றனள். "அதுசரி! அவனும் உனதுமகன்தானே! அப்படியானால் அவன் மாத்திரம் போரில் மடியலாமா?" என்றுவினாவக் குந்திதேவி ஆச்சரியப்பட்டு, 'அது எப்படி?' என்று ஆவலோடு கேட்டாள். கேட்கவே எம்பிரான் ஆதிவரலாறு முழுதும் அவளறியக்கூறினார். உடனே குந்தி-தேவி "ஆ! இது என்னமாயம்! கர்ணன் எனது மூத்தமகன் என்று இதுகாறும் நீ கூறாமல் இருந்து விட்டது ஞாயமா! அந்தோ! இருவருமே எனது மக்களாய் இருக்க அவர்களில் எவரேனும் போரில் மாள நான் எவ்வாறு சகிப்பேன்!" என்று அழுதரற்றினாள். இதன் பின் பரந்தாமன் அவளைத்தேற்றி, 'அத்தையே! கர்ணன் அருச்சுனனைக் கட்டாயம் கொல்லுவான். அருச்சுனன் மடிந்தால் ஐவரும் மடிவர்.

ஐவர்மாள்வது உனக்குச் சம்மதமா; அல்லது கர்ணன் மாள்வது உனக்குச் சம்மதமா? இதனை நீ நன்கு யோசித்துப்பார். இனி நான் சொல்லு கிறபடி செய். நீ இப்பொழுதே கர்ணனிடஞ் சென்று, நீ அவன்தாய் என்று மெய்ப்பித்து, பாண்டவரோடு சேரும்படி கேட்டுக்கொள். அதற்கு அவன் இணங்காவிடில் அவனிடத்தில் இருக்கும் நாகாஸ்திரத்தை அருச்சுனன் மீது 'ஒரு தடவைக்கு மேல் பிரயோகிக்கக் கூடாது' என்று ஒரு வாக்குறுதி வாங்கிவா'' என்று தேற்றி அனுப்பினர். குந்திதேவி கோவென்று கதறியவண்ணமே கர்ணனது கோவிலை அடைந் தாள். அவள் வரவினைக் கண்ட கர்ணன், வந் தடிவீழ்ந்து வணங்கி, "அன்னையே! தாங்கள் வந்த காரியம் என்னையே?'' என்று அன்புடன் வினவினன். அதற்கவள் கண்ணும் கண்ணீரு மாய்க் கதறிக்கொண்டு, "அப்பா கர்ணா! நீ எனது மூத்தபிள்ளை; ஐவரும் உனக்கு அருமைத் தம்பியர் ஆவர்'' என்று அவனை அவள் பெற்ற வரலாறு முற்றும் ஆதியோடந்தமாகக் கூறி னாள். கூறவே இதனைக் கூர்ந்துகேட்டுக்கொண் டிருந்த கர்ணன் "தாயே! நான் கொடுக்கின்ற இந்தப் போர்வையைத் தாங்கள் போர்த்துக் கொண்டு, உடல் எரிந்து கருகா திருப்பீர்களா னால், அப்பொழுதுதான் உண்மையில் என்னை நீர் ஈன்றெடுத்த 'தாயே' ஆவீர்கள்'' என்று

கொடுக்க அதனை அவள் போர்த்துக்கொண்டு பொன் போலிருந்தனள். இதனைக் கண்ட கர்ணன் உள்ளம் பூரித்தானாகிலும் 'உடன் பிறந்த தம்பியாகிய அருச்சுனனைக் கொல்லுவதாகவே' தான் சபதம் கூறிய தன்மையை நினைத்துக் கண்ணீர் சொரிந்து கலங்கினான். பின்னர் ஒருவாறு தேறித் தன் அன்னையை மீண்டும் வணங்கி, "அம்மையே! தாங்கள் வந்தவாறின்னதென்று வழுத்துமாறு பிரார்த்திக்கிறேன்" என்று வருந்தினான். இதனைக் கேட்ட குந்தி "அப்பா மகனே! இதுவரை 'ஐவர்' என்னும் பெயருடன் இருந்துவந்த உனது தம்பிமார்களுடன் நீயும் சேர்ந்து இனி 'அறுவர்' என்னும் பெயர்பெற்று அவனி ஆளக்கடவீர்! இதனை அறிவிக்கவே நான் இங்கு வந்தேன்" என்று கூறினாள். இங்ஙனங் கூறவே கர்ணன் கேட்டு "என்னை ஈன்றெடுத்த அன்னாய்! இன்னான் இனியான் என்று அறியாமுன்னரே என்னைச்சின்னஞ்சிறுகுழவிப் பருவத்தி லிருந்து அன்புடன் வளர்த்து, ஆதரித்து, அங்கதேசாதிபதியும் ஆக்கி, அரசர் எல்லாம் என் அடி வணங்குமாறு செய்தும், என்னுடன் இருந்து, என் எச்சிலையும் உண்டவனல்லவோ துரியோதனன்? அது மாத்திரமா; அவன் வேட்டை மீது சென்றிருந்த போது, அவன் மனைவியும் நானும் அரண்மனைக்குள் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தோம். திடீ

றென்று அவன் ஆங்கு திரும்பிவர, அவனைக் கண்டதும் அஞ்சி எழுந்த அந்த ஆரணங்கை 'அவள் ஆட்டத்திற் காற்றுது செல்வதாக' எண்ணி, ஆடையைப் பற்றி நான் இழுத்தேன். என் கைபட்டு அவளது முத்தாரம் பூமியிற் சிதறிற்று. அங்கு வந்த துரியோதனனைப் பிறகு திரும்பும்போது நானுங்கண்டு சித்திரப்பதுமை போல் செயலற்று நின்றுவிட்டேன். நிற்கவே "நேசா! இம்முத்துகளைச் சேர்க்கவோ, அல்லது கோர்க்கவோ என்று கூறி, எம்முடன் சேர்ந்து பொறுக்கி ஈந்தனன். அத்தகைய அன்புடையானை நான் மறக்கவோ அல்லது வெறுக்கவோ செய்து போர் மூண்ட இத்தருணம் ஐவர்பால் புகுவது அழகாகுமா! உலகறிய அவன் செய்திருக்கிற உதவியை நான் மறந்து உறுநரகிற் காளாவது உங்களுக்கே சம்மதமா? ஆதலின் அதனை விடுத்து, வேறெவையுங் கேளுங்கள்" என்றான். "குழந்தாய்! என் செல்வமே! நீ கூறுவது முற்றும் சரியே! ஆகையால் நான் குறுக்கே பேசுதற் கொன்றுமில்லை. என்றாலும் அருச்சுனனும் நீயும் அடுபோர் தொடும்போது உன்னிடத்திலுள்ள அரவக் கணையை அவன் மீது நீ ஒருதடவைக்குமேல் விடாமலும் மற்றை நால்வரோடும் நீகடுங்கணை தொடாமலும்இருக்க இவ் இரண்டு வரமேனும் ஈவாய்" என்றனள். 'அன்னையே! 'பெற்ற தாய் கேட்ட வரத்தைப்

பிள்ளை ஈய்ந்தானில்லை' என்னும் பெரும்பழி எனக்கு வேண்டாம். தாங்கள் கேட்ட இவ் இரண்டுவரத்தையும் இதோ தந்தேன். இனித் தங்களிடத்திலும் நான் வேண்டும் வரங்கள் இரண்டுண்டு. அவை:- நாளை நான் போர்க் களத்தில் அருச்சுனன் கைக் கணையால் அடி பட்டு மடிவேனுனல் அதுசமயம் தாங்களே என்னைப் "பெற்ற தாய்" என்று தரணி அறியத் தனப்பால் ஊட்டி, என் அருமைத் தம்பியராகிய ஐவரைக் கொண்டே எனக்கு நீர்க் கடனும், நெருப்புக் கடனும் செய்வித்து நிறைவேற் றுதல்ஒன்று. இப் பாரதப்போர் முடியும் வரை என் பிறப்பின் இரகசியத்தை என் தம்பிமார்க ளாகிய அந்த ஐவருக்கும் உணர்த்தாமல் மறைத்தே வைத்தல் மற்ருென்று" என்றுகூற, அவளும் அங்ஙனமே "இவ் வரம் இரண்டும் தந்தேன்" என்று மனமார வாக்களித்தாள்.

பின்னர் குந்தி கர்ணனை நோக்கிக் கோ வெனக் கதறி "அப்பா! என் ஐந்து மக்களை ஆதரிப்பதற்காக என் அருமை மகனுகிய உன் னைக் கொல்லவும் துணிந்து, உன்னிடத்தில் இவ் வரத்தையும்பெற்றேனே! அந்தோ 'பெண் களில்' என்னைப்போல் பெரும்பாவி இப்பேருல கில் வேறு யாருமுண்டோ?" என்று கண்ணீர் வடித்தாள். இதனைக் கேட்ட கர்ணனும் கண்

ணீர்வடித்துக்கொண்டு, தாயே எல்லாம் அவன் செயலன்றோ! பெற்றெடுத்த தாங்களே உலக நிந்தைக்கு அஞ்சி என்மீது பிள்ளைப் பாசமும் இல்லாமல் பேழையில் அடக்கஞ்செய்து பெருகிய நதியில் அன்று விட்டுவிடத்தக்க அபாக்கிய வந்தனை அந்தோ! 'ஆண்களில்' என்னைப் போல் பெரும்பாவி இவ் அவனியில் வேறுயாருமுண்டோ?" என்று அழுதனன். இதன் பின் பிள்ளையைத் தாயும், தாயைப் பிள்ளையும் பிரிய மனமில்லாதவராக அழுதறற்றித் தாயும் பிள்ளையும் ஆங்கு தத்தளித்தார்கள். ஒருவாறு தேறி விடை பெற்றுப் பிறகு பிரிந்தனர். பிரிந்த குந்தி கண்ணபிரானிடத்தில் வந்து, நடந்த அனைத்தையும்கூறினாள். கூறிய அனைத்தையும்கோபால கிருஷ்ணன் கூர்ந்து கேட்டருளி, அவளிடத்தில் விடைபெற்று அஸ்தினாபுரியை விட்டு ஐவரிருக்கை அணுகினார். தூதின் விஷயங்களில் ஒன்றிரண்டு மறைத்து,மற்றவைஎல்லாம் விரித்துக் கூறி அடுபோர் தொடுத்தற்கு ஆம்படை கூட்டுமாறும் ஆஞ்ஞாபித்தருளினார்.

இதன் பின் பாண்டவர் படை கூட்டித் தமது சைனியங்களைக் குருக்ஷேத்திரப் பூமியில் கொண்டு நிறுத்தினர்.கௌரவரும் அங்கனமே தமது சைனியங்களைக் கொண்டு நிறுத்தினர். பிறகு இருதிறத்துப்படையும் ஒன்றோடொன்று

12372



பொருதி, பதினெட்டு நாள்வரை பெரும்போர் நடத்திச் "சகாதேவன் கண்ணபிரானிடத்துப் பெற்றுக்கொண்ட வரத்தின் பிரகாரம்" ஐவரை அன்றி ஆங்கு ஒருவரும் மிஞ்சாமல் அனைவருமே மாண்டனர். பூமிக்குப் பாரம்குறைந்தது; பாவம் தேய்ந்து, புண்ணியம் வளர்ந்தது. பிறகு பாண்டவரே அஸ்திஞபுரிக்கு அரசர்களாக முடி சூட்டப் பெற்று அசுவமேதம் முதலிய யாகங்கள் புரிந்து, இனிதிருந்து எல்லோரும் போற்ற இருநில மோச்சி வந்தார்கள்.

கண்ணபிரான் பாண்டவர்க்குத் தூதாகக் கௌரவர்பால் சென்று வந்த இப் பெருமையை

"மடந்தாழு செஞ்சத்துக் கஞ்சனர் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே!
நாராயணு வென்ஞ நாவென்ன நாவே!" என்று

இளங்கோவடிகள் ஏற்றிப் போ[illegible]ல்போ[illegible]
நாமும் அவனது இணையடிக்கம[illegible] களை[illegible]
போற்றி இடைவிடாது இறைஞ்ச 'வாப[illegible]

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

முற்றும்.

Dr. Victor Eye Hospital,
80, WEST PERUMAL MAISTRY ST.,
WEST GATE, MADURAI.